# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 14/2014** **நாள் : 18/06/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 2014 ஜூன் 15ல் சென்னையில் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட சிஐடியு-வின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் தேர்தலுக்கு பின் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் நாம் தொழிலாளிகளை சந்திக்க வேண்டியுள்ளது. இடதுசாரிகள் பலம் குறைந்துள்ளது கவலை அளிக்கக்கூடிய ஒன்றாகும். புதியதாக ஆட்சி அமைத்துள்ள பி.ஜே.பி அரசு வருமான வரி உச்சவரம்பை உயர்த்தும் என அறிவித்துள்ளது. மத்தியதர ஊழியர்களை உற்சாகப்படுத்தும் குறைந்தபட்ச ஊதியம், பணிநிரந்தரம் அனைத்திலும் கைவைக்கும் நடவடிக்கையை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதலான தாக்குதல் இந்திய தொழிலாளி வர்க்கத்தின் மீது திணிக்கப்பட உள்ளது மட்டுமல்லாமல் ஆட்சியில் ஆர்.எஸ்.எஸ்-ன் ஆதிக்கம் அதிகப்பட உள்ளதையும் இச்சூழ்நிலையில் அரசுத்துறையில் உள்ள சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், பெண்களின் கோரிக்கைகளின் மீது அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடரின் போது ஒரு லட்சம் ஊழியர்களை பேரணியாக திரட்ட வேண்டுமென்று திட்டமிடப் பட்டுள்ளது. ஸ்தாபன பரிசீலனை, விரிவாக்கம், சிஐடியு செய்தி விற்பனை போன்றவைகளை முன்வைத்து உரையாற்றினார்.

மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர் தனது உரையில் நீண்ட காலத்திற்கு பின் பி.ஜே.பி அரசு அறுதிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் அமர்ந்துள்ளது. காங்கிரஸ் அரசு செய்த தவறுகள் பி.ஜே.பி-க்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. மேலும் நர்மதா நதி அணையின் நீர்தேக்க உயரத்தை உயர்த்த மத்திய அமைச்சர் உமாபாரதியின் தலைமையீட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்து மின்வாரியம் சம்மந்தமாக பத்திரிக்கையில் வந்த செய்தியை குறிப்பிட்டு ரூ. 75,000/- கோடி கடன் உள்ளது செலவுகள் குறைப்பதற்கு நடவடிக்கை இல்லை. மின்சாரம் வாங்கி விற்பதில் கூடுதல் செலவு, மின்வாரியத்தில் நடைபெறும் ஊழல், மின்வெட்டு இல்லை என முதலமைச்சர் அறிவிப்பு போன்றவைகளை தனது உரையில் குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் சென்ற நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின்னர் மின்வாரியத்தில் நடைபெற்ற தேர்தல்பணி பொதுக்குழு கூட்ட முடிவு அமலாக்கம், களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுக்கு பி.எம்.எஸ். பெற்ற தடை, அதை நீக்க மின்ஊழியர் மத்திய அமைப்பு எடுத்தமுயற்சி, அதில் பெற்ற வெற்றி, கணக்கீட்டாளர் 2ம் நிலையில் உள்ளவர்களில் 900 ஊழியர்களுக்கு கணக்கீட்டாளராக பதவி உயர்வு பெற்றது. மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று

எடுத்த முயற்சியில் முதல் கட்டமாக 4660 மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று வாரியம் பிறப்பித்த உத்தரவு அதை அமுலாக்குவதில் தேர்தல் விதிகள் தலையீடு அதையும் மீறி வாரிய உத்தரவை அமுலாக்க கோவை, திருவண்ணாமலை, நெல்லை, தர்மபுரி போன்ற திட்டங்களில் நடத்திய இயக்கம், அதன் விளைவாக சில திட்டங்களில் கள உதவியாளர்களுககான பதவி உயர்வு தேர்தல் விதிமுறை முடிந்த பின்னர் மீதமுள்ள திட்டங்களில் பதவி உயர்வு அளித்தது போன்ற நடவடிக்கைகளை விளக்கினார்.

கிளைகள் மட்டுமல்லாமல் தேர்தல் முடிவுக்கு வந்த பின்னர் மீதமுள்ள மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிப்பது, கணக்கீட்டாளர் 2ம் நிலையில் உள்ளவர்களை பதவி மாற்றம் செய்வது. 2005, 2007 ஆம் ஆண்டுகளில் மஸ்தூர்களாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் ஒப்பந்த சரத்துப்படி 2007, 2009 ஆம் ஆண்டுகளில் களஉதவியாளர்களாக நியமிக்கப்பட்டதாக கணக்கில் கொண்டு முதன்மைப்பட்டியலில் பொருத்தி பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கடிதம் கொடுத்து வாரியத்தோடு நடைபெற்ற பேச்சு வார்த்தை விவரங்களை முன்வைத்தார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் கேட்டகிரிக்குழு கூட்டங்கள் என்ற அடிப்படையில் களப்பிரிவு ஊழியர்கள் குழுக் கூட்டம், அனல் மின்திட்ட ஊழியர்கள் குழுக் கூட்டம், கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்கள் குழு, கலைக்குழு ஆகிய குழுக் கூட்டங்கள் நடைபெற்ற விவரங்களை முன்வைத்தார். மேலும் புனல் மின்திட்ட களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்க எடுத்த நடவடிக்கை அது நிறைவு கட்டத்தை அடைந்துள்ளதையும், புதியதாக உருவான அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்களை அனுமதிப்பது. மேலும் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பகுதி நேர ஊழியர்களை நிரந்தரம் செய்ததையொட்டி திட்டவாரியாக கேட்டவிவரங்கள், அதற்கு அளிக்க வேண்டிய பதில்கள் போன்றவற்றை தலைமை அலுவலகத்தில் இருந்து விரைவுப்படுத்தி முடிப்பது சம்மந்தமாக நாம் எடுத்த நடவடிக்கைகள் பற்றி விளக்கினார்.

சமீபத்தில் மின்வாரியத்தில் கள உதவியாளர் (பயிற்சி), கணக்கீட்டாளர் (பயிற்சி), தொழில்நுட்ப உதவியாளர்கள், உதவி பொறியாளர்கள் போன்ற பதவிகளுக்கு புதியதாக பணிநியமனம் செய்யப்பட்டவர்களை அணுகி நமது ஸ்தாபனத்தில் இணைப்பது சம்மந்தமாக ஒரு சில கிளைகள் எடுத்த நடவடிக்கைகளையும் விளக்கினார்.

முன்னணி ஊழியர்களுக்கான மண்டல வாரியாக வகுப்புகளை நடத்துவதற்காக ஆலோசனையை முன்வைத்ததோடு, ஸ்தாபன சம்மந்தமாக பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளான வட்டவாரியான மையம், கிளைக் கூட்டங்கள், மண்டலக்குழுக் கூட்டம், கோட்ட கூட்டங்களின் செயல்பாடு போன்ற விவரங்களை பெற்று ஸ்தாபனம் விரிவாக்கம் சம்மந்தமாக, நடைபெற உள்ள ஸ்தாபன பரிசீலனைக் கூட்டத்தில் முன்வைத்து விவாதிக்க உள்ளதையும் விளக்கியதோடு, உழைக்கும் பெண்கள், குடும்ப நல பாதுகாப்பு திட்டக்குழு கூட்டம் ஆகிய குழுக் கூட்டங்களை கூட்ட வேண்டியதன் அவசியத்தையும், கிளைப் பேரவைகளை உடனடியாக திட்டமிட்டு நடத்திட வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

## நிர்வாகிகள் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன

1. மின்வாரிய பிரிப்பு அமுலாக்கத்திற்கு எதிராக இயக்கம் நடத்துவது,

2. களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் இருவழிப்பாதையில் பொருத்தமான மாற்றங்களை முன்மொழிவது சம்மந்தமாக களப்பிரிவு ஊழியர்கள் குழுக் கூட்டத்தின் முடிவுகளை ஏற்பது அமலாக்கம் செய்வது. அதிலும் வாரியம் அளிக்கும் ஆலோசனையின் அடிப்படையில் நமது ஆலோசனைகளை முன்வைப்பது.

3. (அ) அனல் ஆலோசனைக்குழு கூட்ட இயக்க முடிவுகளான **25.06.2014 அன்று அனல் மின்நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கையை முன்வைத்து நடைபெற உள்ள மாலை நேர தர்ணாவை வெற்றிகரமாக்குவது.** அன்று நடைபெற உள்ள தர்ணா இயக்கத்தில் தூத்துக்குடி அனல் மின்திட்டத்தில் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன், மேட்டூர் அனல் மின் திட்டத்தில் தோழர் கே. விஜயன், வடசென்னை அனல் மின்நிலையத்தில் தோழர் வி. இளங்கோ, எண்ணூர் அனல் மின்திட்டத்தில் தோழர் தி. ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்பது என்று முடிவு செய்யப்பட்டது.

(ஆ) அனல் மின்திட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கையை முன்வைத்து அடுத்த கட்ட இயக்கமான **19.07.2014 அன்று சென்னை மின்வாரிய தலைமையகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.**

4. 14.06.2014 அன்று நடைபெற்ற கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளான 6.7.2014 அன்று கணக்கீட்டு அலுவலர்களின் ஆலோசனைக்குழு கூட்டம் திருச்சியில் நடத்துவது. அப்பிரிவு ஊழியர்களின் மேலோங்கிய கோரிக்கைகளான பதவி உயர்வு வழங்கிட நிர்ணயிக்கப்ட்ட குறைந்தபட்ச கால அளவுகளை முற்றிலுமாக நீக்குவது. 31.12.2013 ஆண்டு முடிய உள்ள மின் இணைப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய பதவிகளை அனுமதித்து நிரப்புவது. இப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் கோட்ட, உபகோட்ட அலுவலகங்களுக்கு ஒரு கணக்கீட்டு அலுவலர் பதவியும், மத்திய அலுவலகத்திற்கு முதன்மை கணக்கீட்டு அலுவலர் (சீனியர் அசஸ்மெண்ட் ஆபீஸர்) தலைமை பொறியாளர், விநியோக அலுவலகத்திற்கு தலைமை கணக்கீட்டு அலுவலர் பதவியை அனுமதிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வாரியத்திடம் கொண்டு சென்று வலியுறுத்துவது, வாரியத்தை வலியுறுத்தும் வகையில் இயக்கங்களுக்கு திட்டமிடுவது என்ற இக்குழு கூட்ட முடிவுகளை முழுமையாக அமல்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

5. **6.7.2014 அன்று திருச்சியில் நடைபெற உள்ள கணக்கீட்டு அலுவலரின் ஆலோசனைக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் இச்சுற்றறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ளது.** கணக்கீட்டு அலுவலர்களை சந்தித்து திருச்சியில் நடைபெறும் குழுக் கூட்டத்திற்கு வரச்செய்து குழுக் கூட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுகிறோம்.

6. களப்பிரிவு, கணக்கீட்டுபிரிவு, அனல் ஆலோசனைக்குழு கூட்ட முடிவுகள் இம்மாத மின்கதிர் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட உள்ளது.

7. மின்வாரியத்தில் தேங்கியுள்ள கோரிக்கைகளான.....

- ✱ மின்பிரிப்பு அமலாக்கத்தை கைவிடு,
- ✱ கணக்கீட்டாளர் 2ம் நிலையில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி உயர்வு செய்திட,
- ✱ மீதமுள்ள 5480 மஸ்தூர்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளித்திடுக.
- ✱ புதிய வேலைபளு அடிப்படையில் உடனடியாக பதவிகளை அனுமதித்து நிரப்பிடுக,

- ✱ கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் புதிய பதவிகளை அனுமதித்திடுக,
- ✱ உற்பத்தி, விநியோக வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை அங்கீகரித்து சட்ட சலுகைகளை வழங்கிடுக,
- ✱ அனைத்து ஊர்மாற்றங்களையும், வாரிய விதிகளின்படி அரசியல் தலையீடு இன்றி வழங்கிடுக.
- ✱ புதியதாக துவங்கப்பட்ட அலுவலகங்களுக்கு பகுதிநேர ஊழியர்கள் பதவிகளை அனுமதித்திடுக,

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் **20.08.2014 அன்று திட்டமட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திடுவது.**

மின்ஊழியர் மத்திய அமைப்பின் முன்னணி ஊழியர்களை பயிற்றுவிக்கும் விதமாக மண்டல வாரியான வகுப்புகளை கீழ்கண்ட வகையில் நடத்துவது.

(அ) விழுப்புரம் மண்டலம் 20.07.2014

(ஆ) வேலூர் மண்டலம் 20.07.2014

(இ) திருச்சி மண்டலம் 20.07.2014

(ஈ) கோவை மண்டலம் 20.07.2014

(உ) மதுரை மண்டலம் 20.07.2014

(ஊ) சென்னை தெற்கு மண்டலம் 27.07.2014

(எ) சென்னை வடக்கு மண்டலம் 27.07.2014

(ஏ) நெல்லை மண்டலம் 27.07.2014

(ஐ) ஈரோடு மண்டலம் 27.07.2014

மேற்கூறிய வகுப்பு ஒரு நாள் வகுப்பாக நடத்துவது, அமர்வில் மாறியுள்ள அரசியல் சூழ்நிலையில் நமது பணி, மாலை அமர்வில் மத்திய அமைப்பின் வரலாறும், விரிவாக்கம் என்ற வகையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

9. பொதுக் கட்டுமான வட்டம், மதுரையில் பணியாற்றும் ஊழியர்களை ஸ்தாபனபடுத்தும் வகையில் பொதுகட்டுமான வட்டம், மதுரை கிளையை 24.06.2014 அன்று துவக்குவது.

10. உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை 24.06.2014 அன்று மதுரையில் கூட்டுவது.

11. கணக்குபிரிவு, நிர்வாகப் பிரிவு, பண்டகசாலைப் பிரிவு, குடும்பநல பாதுகாப்பு திட்டக் குழு கூட்டங்களை உடனடியாக கூட்டுவது,

12. 2005, 2007,-ல் மஸ்துார்களாக பணிநியமனம் செய்யப்பட்டவர்கள் 2007, 2009ல் கள உதவியாளராக பதவி உயர்வு அளித்ததாக கணக்கில் கொண்டு முதன்மைப் பட்டியலை நிர்ணயித்து பதவி உயர்வு அளிக்க வாரியத்தை வற்புறுத்துவது தேவைப்பட்டால் நீதிமன்றத்தை நாடுவது.

13. 6.09.2014 அன்று 5 ஆண்டு பணி முடித்த கணக்கீட்டாளர் 2ம் நிலை ஊழியர்களுக்கு ஒப்பந்தப்படி முன்தேதியிட்டு பதவி உயர்வு வழங்க வாரியத்தை நாடுவது தேவை ஏற்படும் பட்சத்தில் நீதிமன்றத்திற்கு செல்வது.

14. ஸ்தாபனம் சம்மந்தமான இடைக்கால பரிசீலனைக்கு தேவையான விவரங்கள், வட்டவாரியான மையம், கிளைகள் கூடுவது, கோட்ட செயல்பாடு, மண்டலக்குழு கூட்டம் நடத்துவது, கேட்டகிரிக்குழுக்கள் திட்டவாரியாக அமைப்பது, கேட்டகிரி வாரியான ஊழியர்கள் எண்ணிக்கையும், அதில் நமது ஸ்தாபன விவரங்களைப் பெற்று ஜுலை 20 மற்றும் 27 தேதிகளில் நடைபெறும் விரிவடைந்த பட்டறையில் வைத்து விவாதித்து கருத்துக்களை பெற்று அதன் மீது ஸ்தாபன பரிசீலனை நடத்துவது.

15. 2013 ஆம் ஆண்டுஉறுப்பினர் எண்ணிக்கை என்பது இறுதிப்படுத்தப்பட்டு ஈ-படிவம் கொடுக்கப்பட்டதில் 2013 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பில் ஒரு சிறிய இடைவெளி ஏற்பட்டதையும் கணக்கில் கொண்டு 2014 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பில் புதியதாக வாரியத்தில் இணைந்துள்ள களஉதவியாளர் பயிற்சி, கணக்கீட்டாளர் 2ம் நிலை பயிற்சி, தொழில்நுட்ப உதவியாளர்களை அடையாளம் கண்டு நமது இயக்கத்தில் இணைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. ஊழியர்கள் மத்தியில் ஊதிய உயர்வு நன்கொடைக்கான தொகை வட்டங்களில் பிடித்தம் செய்யப்படும் அது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அதை மாற்றி அமைக்கும் வகையில் திட்ட நிர்வாகிகள் அத்தொகைகளை தலைமை அலுவலகத்திற்கு விரைந்து அனுப்பி வைத்திட வேண்டும்.

16. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒக்கூர் அனல் மின்நிலையத்தில் உள்ள ஸ்தாபனத்தை மின்ஊழியர் மத்திய அமைப்பின் கிளையாக செயல்படவைப்பது.

17. வல்லூாரில் உள்ள என்.டி.பி.சி அனல் மின்நிலையத்தில் மத்திய அமைப்பின் கிளையை துவங்க முயற்சி மேற்கொள்வது,

18. மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபக தலைவர்களுள் ஒருவரான தோழர் எம்.மீனாட்சிசுந்தரம் அவர்களின் தொழிற் சங்க பணிச் சம்மந்தமான ஒரு சிறுகுறிப்பு இந்தவார தீக்கதிர் வண்ணக்கதிர் பகுதியில் வர உள்ளது. அதை மின்ஊழியர் மத்திய அமைப்பின் தோழர்களிடம் கொண்டு செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

எடுக்கப்பட்ட முடிவுகளை முழுமையாக அமல்படுத்திட வேண்டுமாய் வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

**செய்திகள்**

1. புனல் மின்திட்ட களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக 17.06.2014 அன்று மின்வாரியத்தோடு நடைபெற்ற பேச்சு வார்த்தையில் கோட்டத்திற்கு / மின்னியல், இயந்திரவியல், சிவில் ஒரு சிறப்பு நிலை முகவர் பதவி உபகோட்ட அளவில் முகவர் முதல்நிலை பதவி கல்வித்தகுதியை தளர்த்தி பதவிஉயர்வு வழங்குவது. சிவில் பகுதியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் தனியான பேச்சு வார்த்தை நடத்தி முடிவு செய்வது கோரிக்கைகளும் ஏற்கப்பட்டுள்ளது. இதன் மீது ஏற்படும் ஒப்பந்தத்திற்கு பிறகு வாரிய உத்தரவை வெளியிடுவது இவை அனைத்தும் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2. நமது முயற்சியின் அடிப்படையில் புதிய வேலைபளு ஒப்பந்தத்தின் அடிப்படையில் திட்டங்களுக்கு அனுமதிக்கப்பட உள்ள சிறப்பு நிலை முகவர் பதவியை மட்டும் இம்மாத இறுதிக்குள் அனுமதித்து நிரப்புவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. மீதமுள்ள கணக்கீட்டாளர் 2ம் நிலை பதவியில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி மாற்றம் செய்வதற்கும், மீதமுள்ள மஸ்தூர்களை களஉதவியாளர்களாக நியமிப்பதற்கும் விவரங்களை கேட்டு பெறுவதற்குண்டான நடவடிககையில் வாரியம் இறங்கியுள்ளது.

4. இளநிலை உதவியாளர் (கணக்கு), நிர்வாகம் ஆகிய பதவிகளுக்கு இப்போதுள்ள கல்வித் தகுதிக்கு மாறாக பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம் போன்ற பட்டங்கள் பெற வேண்டும் என்று வாரிய உத்தரவும், பணி நிலையில் தன்னிச்சையாக மாற்றம் செய்துள்ளதை உடனடியாக திரும்பபெற வேண்டும் என்ற கடிதம் கொடுத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

5. மத்திய அமைப்பு எடுத்த முயற்சிகளின் அடிப்படையில் களப்பணி உதவியாளர்கள் (பயிற்சி) கணக்கீட்டாளர் 2ம் நிலை, தொழில்நுட்ப உதவியாளர்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் சொந்த மாவட்டங்களில் பணிபுரிய மறுஉத்திரவு வழங்கப்பட்டு வருகிறது. முதன்மை அடிப்படையில் மாற்றுத் திறனாளிகள், பெண்கள், பொதுப்பிரிவு என்ற முறையில் ஊர்மாற்றல் உத்திரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

6. தலைமை பொறியாளர் விநியோகம் அலுவலகங்களுக்கு சீனியர் அட்மினிஸ்ட்ரேட் ஆபிசர் பதவி அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தர வெளிவர வாய்ப்புள்ளது.

# பேரவைகளில் பங்கேற்கும் மாநில நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| **சென்னை வடக்கு மண்டலம்** | | |
| 1. | வடசென்னை | ஆர். சிவராஜ் |
| 2. | மத்திய சென்னை | டி. பழநிவேலு |
| **சென்ன தெற்கு மண்டலம்** | | |
| 3. | மேற்கு சென்னை | டி. கோவிந்தராஜு |
| 4. | தென்சென்னை | கே. அருள்செல்வன் |
| 5. | செங்கல்பட்டு | கே. அம்பிகாபதி |
| **வேலூர் மண்டலம்** | | |
| 6. | காஞ்சிபுரம் | எம். வெங்கடேசன் |
| 7. | வேலூர் | எம்.தனலட்சுமி |
| 8. | திருப்பத்துார் | கோ. மோகன்ராஜ் |
| 9. | தர்மபுரி | எஸ். ராஜேந்திரன் |
| **விழுப்புரம் மண்டலம்** | | |
| 10. | விழுப்புரம் | ஈ. அந்தோணி |
| 11. | கடலூர் | தி. ஜெய்சங்கர் |
| 12. | திருவண்ணாமலை | ஈ. அந்தோணி |
| 13. | கள்ளக்குறிச்சி | வி. இளங்கோ |
| **திருச்சி மண்டலம்** | | |
| 14. | பெரம்பலூர் | ஆர். ஸ்ரீதர் |
| 15. | திருச்சி/மாநகர் | டி. கோவிந்தராஜு |
| 16. | கரூர் | பி. கே. சிவக்குமார் |
| 17. | புதுக்கோட்டை | ஐ.எம்.ஆர். கணேசன் |
| 18. | தஞ்சாவூர் | ஏ. பழனி |
| 19. | நாகப்பட்டிணம் | டி. ஸ்ரீதர் |
| **மதுரை மண்டலம்** | | |
| 20. | மதுரை | கே. ரவிச்சந்திரன் |
| 21. | மதுரை மாநகர் | டி. அறிவழகன் |
| 22. | தேனி | பேரவை நடத்தப்பட்டது |
| 23. | ராமநாதபுரம் | பேரவை நடத்தப்பட்டது |
| 24. | சிவகங்கை | ஏ. வீரண்ணன் |
| 25. | திண்டுக்கல் | பேரவை நடத்தப்பட்டது |

**திருநெல்வேலி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 26. | விருதுநகர் | வி. பாலசுப்பிரமணியன் |
| 27. | திருநெல்வேலி | பேரவை நடத்தப்பட்டது |
| 28. | தூத்துக்குடி | ஆர். குருவேல் |
| 29. | கன்னியாகுமரி | பேரவை நடத்தப்பட்டது |

**கோவை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 30. | நீலகிரி | எம். பன்னீர்செல்வம் |
| 31. | கோவைதெற்கு | கே. விஜயன் |
| 32. | கோவைவடக்கு | எச். ஜான்சௌந்தரராஜன் |
| 33. | கோவை மாநகர் | ஆர். கருமலையான் |
| 34. | திருப்பூர் | சி. ஜோதிமணி |
| 35. | உடுமலைபேட்டை | ஜி. ராமகிருஷ்ணன் |

**ஈரோடு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 36. | சேலம் | வி. மதுசூதனன் |
| 37. | மேட்டூர் | எஸ். வண்ணமுத்து |
| 38. | ஈரோடு | எஸ். ராஜேந்திரன் |
| 39. | கோபி | எஸ். ஆனந்தன் |
| 40. | நாமக்கல் | ஆர். ரவிக்குமார் |

**அனல் மின்நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| 41. | வடசென்னை அனல் | தி. ஜெய்சங்கர் |
| 42. | எண்ணூர் | ஆர். ரவிக்குமார் |
| 43. | மேட்டூர் அனல் | எஸ். வண்ணமுத்து |
| 44. | தூத்துக்குடி அனல் | வி. இளங்கோ |

**புனல் மின்நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| 45. | ஈரோடுஉற்பத்தி | பேரவை நடத்தப்பட்டது |
| 46. | காடம்பாறை | எஸ். ராஜேந்திரன் |
| 47. | குந்தா உற்பத்தி | வி. மதுசூதனன் |
| 48. | நெல்லைஉற்பத்தி | பேரவை நடத்தப்பட்டது |
| 49. | காற்றாலைபண்ணை | - |
| 50. | பொதுகட்டுமான ம் | ஏ. பழனி |
| 51. | தலைமையகம் | |
| | மொத்தம் | |

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 15/2014** **நாள் : 12/07/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர்களில் ஒருவராகவும், மண்டலச் செயலாளராகவும், கோவை மாவட்ட சிஐடியு-வின் பொருளாளராகவும் பணியாற்றிய தோழர் டி.எஸ். சுப்பையன் அவர்கள் 4.7.2014 அன்று மரணமடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மதுரை பொதுக்கட்டுமான வட்டக் கிளை துவக்கம்

24.06.2014 அன்று நிர்வாகிகள் கூட்டத்தில் திட்டமிட்டவாறு பொதுகட்டுமான வட்டம் மதுரை கிளை துவங்கப்பட்டது. கிளை துவக்க விழாவில் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒரு குறிப்பிட்ட அளவில் சந்தா வசூலித்து மத்திய அமைப்பின் மாநில மையத்திடம் செலுத்தி உள்ளனர். நடைபெற்ற கிளை துவக்க விழாவில் தலைவர் எம். ஜெயகாந்தன், கிளை செயலாளர் எஸ். சிக்கந்தர்பாட்ஷா, பொருளாளர் எம்.பழனி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## மின்வாரிய உழைக்கும் பெண்கள் கூட்டம்

24.06.2014 அன்று மின்வாரிய உழைக்கும்பெண்களின் மாநில ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மதுரையில் நடைபெற்றது. நல்லவருகை என்பது பதிவானது, அக் கூட்டத்தில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவில் உள்ள தேக்கத்தை களையுயம் வகையில் வட்டவாரியாக பெண்கள் கூட்டத்தை நடத்துவது. இவ்வருட இறுதியில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் மாநில மாநாட்டை நடத்துவதென்றும் திட்டமிடப்பட்டது.

## அனல் மின்நிலைய ஊழியர்களின் இயக்கம்

அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை வைத்து 25.06.2014 அன்று நான்கு அனல் மின்நிலையங்களின் நுழைவு வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற முடிவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட இயக்கமாக 19.07.2014 அன்று மின்வாரிய தலைமையம் முன்பு அப்பகுதி ஊழியர்களை திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் 19.07.2014 புனல் மின்நிலையத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கான ஒப்பந்தம் மின்வாரிய தலைமையகத்திலேயே நடைபெற உள்ளதால் அந்த இயக்கம் தற்காலிகமாக தள்ளி